# உள்ளுறை


| | | |
|---|---|---|
| குருவருள் | தோடுடைய செவியன் | 3 |
| | கூற்றாயினவாறு | 5 |
| | பித்தா பிறைசூடி | 8 |
| மறையின் வரலாறு | மந்திரமாவது நீறு | 9 |
| அஞ்செழுத்துண்மை | துஞ்சலும் துஞ்ச | 11 |
| | காதலாகிக் கசிந்து | 13 |
| | சொற்றுணை வேதியன் | 14 |
| | மற்றுப்பற்றெனக் | 16 |
| கோயிற்றிறம் | ஆரூர்தில்லை | 18 |
| | தில்லைச் சிற்றம்பலஞ் | 21 |
| | காட்டூர்க் கடலே | 24 |
| சிவனுருவம் | ஓருருவாயினை | 25 |
| | வரிய மறையார் | 27 |
| | பாளை யுடைக்கமு கோங்கி | 28 |
| | வடிவேறு திரிசூலந் தோன்றும் | 30 |
| | மருவார் கொன்றை | 33 |
| திருவடிகள் | | |
| | பொடியுடை மார்பினர் | 35 |
| | அரவணையான் | 36 |
| | அந்தணாளன் | 39 |
| அருச்சனை | | |
| | பந்துசேர்விரலாள் | 42 |
| | வேற்றாகி விண்ணாகி | 45 |
| | கொன்று செய்த | 48 |
| அடிமை | | |
| | வேயுறு தோளி பங்கன் | 50 |
| | குலம்பலம்பாவரு | 53 |
| | தில்லைவாழந்தணர் | 55 |
| 8ம் திருமுறை திருவாசகம் | | |
| | சிவபுராணம் | 58 |
| | திருவெம்பாவை | 62 |
| | திருப்பொற்சுண்ணம் | 67 |
| | திருப்பள்ளியெழுச்சி | 73 |
| | அச்சோப் பதிகம் | 76 |
| | திருக்கோவையார் | 77 |
| 9ம் திருமுறை | திருவிசைப்பா | 78 |
| | திருப்பல்லாண்டு | 79 |
| 10ம் திருமுறை | திருமந்திரம் | 80 |
| 11ம் திருமுறை | திருமுகப்பாசுரம் | 80 |
| 12ம் திருமுறை | பெரியபுராணம் | 82 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பதிப்புரை

திருமுறைப் பெருவிழா மலராக அகத்தியர் தேவாரத் திரட்டு பன்னிரு திருமுறைத் தொகுப்பு வெளிவருகின்றது. அகத்தியர் தேவாரத் திரட்டினைப் பாராயணம் செய்தல் அடங்கன்முறை முழுவதையும் பாராயணம செய்ததற்குச் சமமென்பது ஐதீகம். அகில இலங்கைத் திருமுறை மன்றம் பல மாதங்களாகப் பூரணை தினங்களில் சைவாலயங்கள் தோறும் சென்று அகத்தியர் தேவாரத் திரட்டையும் பன்னிரு திருமுறையையும் பாராயணஞ் செய்து வருவது யாவரு மறிந்தது. வைகாசி ஆடிப் பூரணையில் திருமுறைகளுக்கு விசேட பூசைசெய்து பூசிக்க வேண்டுமென ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் நாலாம் பாலபாடத்தில் மடம் என்ற கட்டுரையிற் குறிப்பிட்டுள்ளார். திருமுறைக் களஞ்சியத்தைப் பதிப்பித்த ஸ்ரீமத் சுவாமிநாத பண்டிதர் திருமுறைப் பெருமை என்ற கட்டுரையில் அதனை அநுவதித்துள்ளார்.

ஆடிவை காசித் திங்க ளடுத்தபூ ரணையிற் பூசை
நாடினர் தாமு முன்னை நற்பயன் பற்று வார்கள்
ஏடெழு தூசி பாச மீந்தவ ரெழுதி வைப்போர்
பீடுறப் பயில்வோர் சொல்வோர் பெரிதரும் பயன்களாய்வோர்

எனவரும் தணிகைப்புராணப் பாடல் அதனை வலியுறுத்து கின்றது. பலரும் பயன்பெற எடுக்கும் திருமுறைப் பெரு விழாவும் அகத்தியர் தேவாரத் திரட்டு பன்னிருதிருமுறைத் தொகுப்பு நூலும் சிறப்புற அமைவதற்கு ஆசி தந்தருளிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமஹா சன்னிதானம் அவர்களுக்கும் துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும் பொரு ளுதவி புரிந்த புரவலர்களுக்கும் புரவலர்களிடம் எம்மை வழிப்படுத்திய அன்பர் திரு. த. தியாகலிங்கம் அவர்களுக் கும் அழகுற அச்சிட்டுத் தந்த சாந்தி அச்சகத்தினர்க்கும் அகில இலங்கைத் திருமறை மன்றம் நன்றி கூறுகிறது. எல்லோருடைய உதவியும் என்றும் நின்று நிலவத் திரு வருளை வேண்டுகின்றேன்.

வ. பேரின்பநாயகம்

தலைவர் அகில இலங்கைத் திருமுறை மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின்
# அருளாசிச் செய்தி

சிவநேயச் செல்வர்களே!

அகில இலங்கைத் திருமுறை மன்றம் அகத்தியர் தேவாரத் திரட்டு என்னும் நூலை வெளியிடுவதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றோம். சைவ மக்களின் சைவப் பண்பையும் இறை நம்பிக்கையையும் உண்டாக்குவதாகிய பன்னிருதிருமுறைகள் இறைவனருளால் நாயன்மார்களால் பாடப்பட்டவை. மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு மனிதர்களாகிய அனைவரும் இறைவனுடைய திருவருளை பெறவேண்டும். அத்திருவருளைப் பெற்றுத் தருவதே திருமுறைகளாகும். திருமுறைகளைஓதுவதன் மூலமாக இறைவனுடைய பூரண அருளைப் பெற்று இம்மை வாழ்க்கைக்கும், மறுமை வாழ்க்கைக்கும் பெரும் பயனைத் தேடிக் கொள்ளலாம். திருமுறைகள் அனைத்தையும் ஓத இயலாத அடியவர்க்கு இலகுவாக அடங்கன் முறை முழுவதையும் படித்த பயன் தருவது அகத்தியர் தேவாரத் திரட்டு. இதனை வெளியிடும் அகில இலங்கை திருமுறை மன்றத்தினருக்கும் இதனை ஓதிய அடியவர்களுக்கும் இறைவனுடைய அருளும் ஆசிகளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய ஸ்வாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின்

# ஆசியுரை

''ஆசையறாய் பாசம் விடாய் ஆனசிவ பூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்''

என்பது அருளாளர் கருத்து. எனவே எமது இன்றியமையாத கடமைகளில் ஒன்றாக அமைய வேண்டியது திருமுறை ஓதுதலாகும். அருட்பணியாகிய இதனை ஆலயங்களிலும் மடாலயங்களிலும் சைவ நிறுவனங்களிலும் வளர்த்து வரும் பொறுப்பு சைவத் தமிழ் மக்களினதாகும். அகில இலங்கைத் திருமுறை மன்றம் இதனை நல்லபடி நிறைவேற்றி வருவது பாராட்டுக்குரியதாகும்

திருமுறைப் பெருவிழா இவ்வருடம் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் நடைபெற இருப்பது மிக மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாகும், வைகாசிப் பூரணைத் தினமான 09-06-98 செவ்வாய்க் கிழமை இவ்விழா நடைபெற இருக்கிறது. தில்லைச்சிற்றம்பலவன் எமக்குத் தந்த அரும்பெரும் பொக்கிஷமாக விளங்குவன திருமுறைகளே. அங்கு திருமுறைகளைக் கண்டெடுத்த பொழுது பதினோராம் நூற்றாண்டில் ஆட்சி செய்த இராசராசசோழன் அடைந்த மகிழ்ச்சியை திருமுறை கண்ட புராணம் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. சைவத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் திருமுறைப்பற்று உடையவர்களாக வாழ வேண்டும். எங்கள் வாழ்வுக்கு வளமூட்டுவன இவை. ''தோடுடைய செவியன்'' என்று முதலாம் திருமுறையில் தொடங்கி ''வான்புகழ் நின்றது எங்கும் நிலவி உலகெலாம்'' என்று பன்னிரண்டாம் திருமுறையில் நிறைவு பெறுகிறது திருமுறை எமது வாழ்வைத் தூய்மையும் பக்தியும் விளங்க அருள் நெறியிலே செலுத்தி நிற்பதற்கு திருமுறைகளே வழி காட்டுகின்றன. இதனாலேயே நாவலர் பெருமான் போன்ற அருளாளர்கள் ஆலயங்கள் தோறும் திருமுறைகளை ஓத வேண்டும் என்று வழிகாட்டிச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைப் பெருவிழா சிறப்புற வரி வழங்கிய வள்ளல்கள்

| | | |
|---|---|---|
| திரு பே நாகரத்தினம் | E.S. பேரம்பலம் அன்சன்ஸ் யாழ்ப்பாணம் | 3000-00 |
| திரு த நாகராசா | நாகஇராஜேஸ்வரி மோட்டோஸ் சிவலிங்கப்புளியடி | 3000-00 |
| திரு கு கங்கைவேணியன் | வேணி களஞ்சியம் யாழ். | 3000-00 |
| திரு ச வீ முருகேசு | எஸ் வி முருகேசு யாழ். | 2500-00 |
| திரு நா அப்புலிங்கம் | லிங்கன் கூல்பார் யாழ். | 2500-00 |
| திரு எஸ் பாக்கியராசா | குபேரன் களஞ்சியம் யாழ். | 1001-00 |
| திரு மு யோகராஜா | அம்பாள் களஞ்சியம் யாழ். | 1001-00 |
| திரு சி குமரவேல் | ஸ்ரீ ஐயனார் தேவஸ்தானம் சுன்னாகம் | 1001-00 |
| திருமதி சி உதயகுமார் (கண்ணன்) | கலட்டி யாழ் | 1001-00 |
| திரு க சிவராசா | ஏழாலை | 1000-00 |
| திரு க பாலரூபன் | உடுவில் | 500-00 |
| திரு கே இராமநாதன் | கொழும்புத்துறை | 500-00 |
| திரு க மூர்த்தி | கந்தன் களஞ்சியம் யாழ். | 500-00 |
| திரு க திருலோகநாதன் | ஸ்ரீ சக்தி களஞ்சியம் யாழ். | 500-00 |
| திரு ப ஸ்ரீ முகுந்தன் | யாழ்ப்பாணக் களஞ்சியம் யாழ் | 500-00 |
| திரு க நந்தகுமார் | கலைமகள் களஞ்சியம் யாழ். | 500-00 |
| திரு க குமாரசாமி | சிவசக்தி களஞ்சியம் யாழ் | 500-00 |
| திரு சி பரமநாதன் | நாதன் களஞ்சியம் யாழ். | 500-00 |
| திரு த கிருபாகரன் | சுன்னாகம் | 500-00 |
| திரு இ ஆறுமுகசாமி | இணுவில் | 500-00 |
| திரு செ நகுலேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 250-00 |
| திரு பே இராஜேஸ்வரன் | பாலகணேசன் களஞ்சியம் | 250-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கோயில் வழிபாடு செய்வதையும்,
திருமுறை ஓதுவதையும் தினமும் மேற்கொள்ளுங்கள்

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் எம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் — முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே? மாமறைநூல் தானெங்கே?
எந்தைபிரான் அஞ்செழுத் தெங்கே.

# திருக்கோயில்களில் திருமுறைக்கு உரிய இடம் வழங்குக

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் மாதந் தோறும் பௌர்ணமி தினத்தில் திருக்கோயில்களில் சென்று பன்னிரு திருமுறைப் பாராயணம், அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் ஆகிய நிகழ்வை நடாத்தி வருகின்றனர். அத்துடன் தமிழகம் ஈழம் சார்ந்த ஓதுவார் மூர்த்திகள் பாடிய திருமுறைப்பாடல்கள் ஒலிப்பதிவில் பெற்றுக்கொள்ளலாம்.

அகில இலங்கைத் திருமுறை மன்றம்
102, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

சாந்தி அச்சகம் - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org